உ
கணபதிதுணை.

துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்த

சோணசைலமாலை

மூலம்.

இஃது
கோ-லோகநாத முதலியாரால்
தமது
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சென்னை
1915.

இதன் விலை அணா—க.

புத்தக விளம்பரம்.

ஞானவாசிட்ட வசனம்	1	8	0
கட்டளைக்கொத்து	0	8	0
பகவற்கீதை வசனம் (தஞ்சைபதிப்பு)	1	4	0
ஸ்ரீகுமாரதேவர் சாஸ்திரம்-16	0	10	0
பிரபுலிங்கலீலை	0	8	0
வள்ளலார் சாஸ்திரம்	1	8	0
ஞானசீவவாதக்கட்டளைக் கொத்து	0	6	0
திருக்கடந்தை புராணம் உரை	0	8	0
அரிச்சந்திரபுராண மூலம்	0	8	0
சானந்தகணேசர் புராணம் உரை	0	12	0
சேதுபுராண வசனம்	2	0	0
சேந்தன்திவாகரம் 12-தொகுதி (திக்கு)	0	10	0
திருவள்ளுவர் குறள் மூலம்	0	4	0.
ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தூது உரை	0	6	0
சிவநாமசங்கீர்த்தனம் (படத்துடன்)	0	4	0
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (படத்துடன்)	0	6	0
சப்தரிஷிவாக்கியம் 5500-பாடல் (திக்கு)	6	0	0
கந்தபுராணச் சுருக்கம் செய்யுள்	0	12	0
ஜீவரக்ஷாமிர்தம்	4	0	0
மனவுல்லாச கதை	0	8	0

பலவித புத்தகங்கள் வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஏககாலத்தில் ஒரேதினுசில் 5-புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஷை தினுசில் ஒரு புத்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். அரைஅணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒரு கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

☞ கொ. லோகநாத முதலியார்.

மனோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,

29. செ. வைத்தியநாத முதலியார் வீதி, சென்னை.

கணபதி துணை.

சோணசைலமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

சதுரனெழிற் சோணசைலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மநமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

நூல்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா வன்றியென் கவியுநின் றனக்காம், பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற்பாணிமா ஞொலியுமேற் றிலையோ, விண்ணுலா முடியின் மேருவின் வடபால் வெயிலொரு புடையுற வொருபாற், றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௧)

துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந் துயர்ந்திடா தடைந்துகாண் மன்று, முவப்புட னிலைத்து மரிக்குமோர் பதியு மொரக்குமோ நினைக்குநின் னகரைப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்படர் பவர் திகைப்பற நோக்கித், தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோணசைலனே கைலைநா யகனே. (௨)

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளே னவைதுரந்திடுமுன், வாங்கிநின் றனிவீட் டுறைதுவான் விரும்பி வந்தன

னின் குறிப்பறியே, னுங்குறை மதியே தாங்கியென் றுலக மறை குறை யறநிறை மதியுந், தாங்கிய முடியோ டோங்கிய சோண சைலனே கைலநாயகனே. (௩)

கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங் கன்மநக் கொடிய னுக் கென்னீ, துனிமலை பிறவி தவிர்த்தனை யெனகிற் சுளிபவரிலை யெனக் கிரங்காய், பனிமலை கதிர்வந் துறநிலை யாடி பயின்றபீ டிகையென வுதயத், தனிமலை யிருப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலநாயகனே. (௪)

சுடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித் துயர்ந்துநின் றலமரு மநகின்,னடனவில் சரண பங்கய நினைந்து நைந்துநைந் துருகுநா ளுளதோ, மடலவிழ் மரைமாட் டெகினென வருகு மதியுறக் கார்த்திகை விளக்குத், தடமுடி யிலங்க வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலநாயகனே. (௫)

அருங்கவி வாதவூரனேமுதலோ ரன்பிலே மென்றது வேண்டி, யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா னியம்பலே மெய்யெ னக் கருளாய், கருங்கட முமிழு மீர்ங்கவுட் பனைக்கைக் கரியுரி கஞ் சுகங் கடுப்பத், தாங்கமுண் டெழுகார் முகில் பயில் சோண சைலனே கைலநாயகனே. (௬)

புரத்துறு மவுணக் குழாமும்வண் டிசைகூர் பூங்கணை மதனு முன் பெறுநின், சிரித்தவெண் ணகையு நுதல்விழி நோக்குஞ்சிறி யனே னிருண்மலம் பெறுமோ, கருத்தினுங் கருத வரியநுண் ணியனென் கடனற வுலகெலாங் காண்பான், றரித்ததி தூல வடி வுறுஞ் சோண சைலனே கைலநாயகனே. (௭)

ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ் சமுதுசெய்பெரும் புகழ்த் தனிமை, தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றனைநின் றிரு

வடிக் கன்பனுக் கிலேயே, கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து கண்டவ ரகத்திரு ளனைத்துஞ், சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அ)

தொடையுடைத் திரடோ ணமன்புறத் துடவந் தொலைக்குமு னகத்துட ருலைத்துத், தடையறத் திகழ்பே ரறிவுரு வாகத் தமிய னேற் கருளுநா ளுளதோ, புடையினிற் கரிக்கோ டிளம்பிறை புரையப் பொங்குசோ தியங்கொடி விரித்த, சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண சைலனே கைலைநா யகனே. (௯)

கண்புன றுளிப்ப வழற்படு மிழுதிற் கரைந்துகு நெஞ்சினின் றனையே, பெண்பயி லுருவ மொடுநினைந் தெனது பெண்மய லகற் றுநா ளுளதோ, வண்புனல் வேந்த னூர்கலிக் குடத்து மணிமுகிற் கலயத்தின் முகந்து, தண்புன லாட்ட வாடுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧0)

வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின் மெய்யினைப் பொய் யெனு மவர்க்கே, யேலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய் யெனு மெனக் கருள்புரிந் திடாயோ, காலநன் குணர்ந்து சிநகரம் புகுந்து காணரி தெனுதல கனைத்துஞ், சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௧)

மயலினு வழுந்தும் பிறவியா மளற்றை வளர்தரு நின்பெருங் கருணை, வெயிலினு லுலர்த்தி யெனதுளக் கமலம் விரிக்குமொண் பரிதிநீ யலையோ, பயிலுமா லயமோர் சைலமோர் சைலம் பகைப் புல முருக்குகார் முகமோர், சைலமாதலனு மெனக்கொளுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௨)

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால் புந்தியஞ் சிநகரத் திருத்தி, நலம்புரி புநிதர் பேரவை தமியே னணுகுவா னருளுநா

ளுளதோ, வலம்புரி மனிதர் கடலென வொலித்து வளைவுற நடு வண்மந் தரம்போற், றலம்புரி தவத்தி னின்றுளிர் சோண சைலனே கைலைநா யகனே. (கங)

நீரினி லெழுமொக் குளிளழி யுடம்பு நிலையென நிலைக்குமா நந்த, வாரிதிபடிய வறிந்திடா தழலு மடமையே னுய்யுநாளுள தோ,வேரியல் பதமுன் றேடுமெக்கேழ லின்றுநா டியகிளைத் திடற் போற், சாரவி னேன மருப்புமுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கச)

கருத்திடைநினது கருணைமா மேனி கண்டெழுத் தைந்து நா வியம்பச், சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான் றினம் வலம் புரியுமா றருளாய், வரத்திருமுடியின் மதிதிருமுடியின் வனைந்து கந் தரத்தினி லிருள்கந், தரத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கரு)

பாரெலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனென வுணர்ந்து நாடொறுமா, ரூரனு ரவையி னிகழுந்தசொற் றுதியி னுவக்குநின் பதந்தொழ வருளா, யேருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா விலங்குறுமண்டகோ ளகையாச், சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கசா)

இந்தியங் கரண முடலம்வே றுக்கி யிருண்மலப் படலமுங் கிழிக், கந்தமு மலரு மெனநினை யென்னிற் காண்பறக் காணுநா ளுளதோ, வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற மலிபகை தவிர்ப்பவென் னிறந்த, தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோண சைல னே கைலைநா யகனே. (கள)

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன் மொய்குழன் மகளிர்தம் மயலாற், புழுங்குமென் றனைநின் றிருவடி நிழலிற் புக விடுத் தளிக்குநா ளுளதோ, வழங்குவெண் டிரையா றவிர்சடை

கரப்ப மணிமுடி மின்றிழிந் திடல்போற் றழங்குவெள்ளருவி யிழிந் தொளிர் சோண சைலனே கைலைநா யகனே. (கஅ)

குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை மதநவே ளெனவும், புன்றொழின் மனிதர் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும் புல மைதீர்த் தெனக்கருள் புரியா, யொன்றொரு தினந்தோட் குட்கு ழைந் தனமென் றுருதுநா டொறுமக மேரு, தன்றலை தாழ்ப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கக)

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் தறும்பெரு மிடியுங், கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுமிக் கொடிய னேற் கருளுநா ளுளதோ, வண்டுழுங் குவளை மலர்த் தடஞ் சுனை யின் மற்றைவா னவர்க்குறித் தன்றித், தண்டியுண் மகிழ்ந்து கொ ளமலர் சோண சைலனே கைலைநா யகனே. (உ0)

வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலையுண் சிரவினிற் கின்றுான், முந்திநீ யெனையா னந்தவா ரிதியின் மூழ்குற விடுத்த ருள் புரியாய், நந்துளான் மலையே யென்றுசா திப்ப நனைமலர் வேங்கையு மசோகுஞ், சந்துமேன் முளைப்பச் செய்து கொள் சோ ண சைலனே கைலைநா யகனே. (உக)

பூமழை யமரர் பொழியமா தவர்கட் புனன்மறு கிடைப் பொடியடக்கத், தூமொழி மனைநீ தூதுபோம் பயனில் சொற்பதர் புடைத்திளைக் கின்றேன், யாமுணர் மிகுபே ருருவமாய் வரினு மிருவரு முணர்த்திடி னன்றித், தாமுணர் கிலரென் றெழுந்துயர் சோண சைலனே கைலைநா யகனே. (உஉ)

கழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங் கமருகு மமிழ்தின்மங் குறுமல், விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம் விழைகுநர்க் கேவல்செய் திலனே, மழைமதக் களிநல் யானைமத்

தகம்பாய் வள்ளுகி ரோடுசெல் வரிமா, தழைசிறைச் சிம்புள்
கொண்டெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (உ௩)

கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங் கணைபுரை மதர
ரிக் கருங்கட், டார்தரு குவவுக் கொங்கைநுண் மருங்குற்றையலார்
மையலென் றொழிவேன், சீர்தரு மணியி னணிந்தன வெனக்கட்
செவியுமொண் கேழலின் மருப்புஞ், சார்தரு முலக விளக்கெனுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (உச)

நந்துகைத் தலத்து நாரணற் கயற்கு நவமணிக் கரகநீ ரிருந்து,
மைந்துறக் குறித்து மாட்டியுங் காண்பான் மதித்திடா துணையெ
திர்ந்திலரே, யைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு மறு
முகம் படைத்தகே சரியுந், தந்தெமைப் புரக்குங் கருணைகூர் சோ
ணசைலனே கைலைநா யகனே. (உரு)

வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக் குதவி
லேன் முந்திற், றுணையிரந் திடுவான் வந்தனன் பதநீ யுதவியென்
றுயரொழிந் தருளா, யினியபைந் தமிழின் பொதியமால் வரை
போ லிசைக்குரு காதிம மலையின், றனையயின் றீஞ்சொற் குரு
குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (உசு)

பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண் பேதையர்ப்
புகழ்ந்தவ திரிவேன், பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென்கினுநீ
பயன்றர லறிந்துநிற் புகழேன், கண்ணுறுங் கவின்கூ றவயவங்
கரந்துங் கதிர்கணு ரூயிரங் கோடித், தண்ணிறங் கரவா துயர்ந்
தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (உஎ)

உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்கு லொளிமணிப் பாம்
புநீண் டெலான், மயங்குவேன் றனக்குன் பதமருந் துதவி மயக்க
மென் றொழிந்தருள் புரிவாய், முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தண

ர்க்கு முத்துவெண் பந்தரீந் தகல்வான், றயங்குமீன் முத்துப் பந்தர்
வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (உஅ)

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும் விளங்குமா கமவு
ணர்ச் சியினும், புந்தலர் கொடுசிற் பரவுபூ சையினும் பொழுது
போக் கெனக்கருள் புரிவாய், முத்தமு மரவ மணிகளு மெறிந்து
முதிர்தினைப் புனத்தெயின் மட்வார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (உகூ)

பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற் பழமொழி யொழி
யமெய் யடியா, ராயுமென் மலரோர் மலையள வணிய வமர்ந்தநின்
கோலம்யான் மறவேன், றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்
பச் சூழ்பசுங் கொடிபயி லுருவச், சாயைசென் றுறநின் றிலங்கு
றுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩0)

நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு நளினமென் மலர்க்
காத் தெறிபூம், படையொடு துரந்து வந்துமென் விடயப் பகைப்
புலி தனையெறிந் திலையே, யடிநடு நிழல்சென் றெழுகட வடைய
வகல்பெரும் புறத்துவா ரிதியிற், றடமுடி நிழல்சென் றுறவளர்
சோண சைலனே கைலைநா யகனே. (௩௧)

யாவுமா முமையுண் ஞமலை முலைப்பா லீந்துபா டச்செயா
யெனினு, மேவுமா துயர்செய் சூலைநோ யெனினும் விடுத்துநிற்
பாடுமா றருளா, யோவுமா னலது தொல்லுருக் கொளின்வே
றொன்றெடுத் திடுமென நினைந்து,தாவுமா னினமெண் ணிகந்தசூழ்
சோண சைலனே கைலைநா யகனே. (௩௨)

விருப்பொடு வெறுப்பு மகன்றுபே ரின்ப வெள்ளத்து ளழுந்
துநின் னடியார், திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்மை செய்
பெருஞ் செல்வமே யருளாய், பொருப்புக டொறும்வீழ் பொங்கு

வெள்ளருவி போன்றமி விலர்க்கிடை யருமற்,றரிப்பருங் கருணை பொழிதருஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௩)

பொங்குறு கவினுங் கற்பும்வாய்ந் திலங்கு புண்ணிய மடந்தையும் பொருளு, மிங்குநன் குதவி யங்குவான் கதியி னிருத்துநிற் புவவரென் புகழார்,தங்கவெங் குறவர் புனத்திடு பரண்கா றுணித்துநட் டாரமீ மிசைமா, தங்கவெண் மருப்புப் பரப்புறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௪)

போழ்ந்திடு வடுக்கண் மகளிரை யணைத்துப் புகழ்நந்தி பிரம்படிக் கொதுங்கிச், சூழ்ந்திடு மமரர் நெருங்குசந் நிதியிற் றெண்டனேன் வரவருள் புரியாய், வாழ்ந்திடு மகக்கண் டுருகுதாய் முலைப்பால் வழிந்தொழு குதலென வடியார், தாழ்ந்தெழ வருவி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௫)

நேர்ந்திடு மொருசங் கோல்கொடு கொடுங்கோ னிமிர்ந்திடவிலங்கைசென் றடைந்தோன், கூர்ந்தவன் பொடுநின் றிறைஞ்சுபு வழுத்துங் குரைகழ விரக்கவஞ் சுவல்யான், சேர்ந்திடுமலைமான் பெருமுலை யுவமை சிறுமலை களுக்குத வாமற், சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௬)

தெருமரும் பிறவி தமையகன் றிடாத தேவரைத் தேவரென் றெண்ணி, யருமருந் தனைய நினையடை யாத வறிவிலார் பவப்பிணி யறுமோ, கரிமருங் கணைந்த தெனமுழை வாயிற் கார்வர விரைந்தெழுந் துகள்கே, சரிமறைந் திருந்து நாணுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௭)

ஆண்டுகம் பலசென் றிடவிருந் திடினு மன்றியோ ரிமைப்பினி லுடல, மாண்டுகு மெனினு நன்றுநின் கமல மலரடிக் கன்பராயி

ருப்பிற், பூண்டயங் கயில்வேற் குதலையந் தீஞ்சொற் புதல்வன்மே
லிவர்செய லெனமார்த், தாண்டன்வந் திவர விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநாயகனே. (௩௮)

விரைவிட யிவரு நினைப்பிற வாமை வேண்டுநர் வேண்டுக மது
ரம், பெருகுறு தமிழ்ச்சொன் மலர்நினைக் கணியும் பிறவியேவேண்
டுவென் றமியே, னிருசுடர் கஞ்மேல் கீழ்வரை பொருந்த விடையு
றன் மணிக்குடக் காவைத், தரையிடை யிருத்தி நிற்றனேர் சோ
ண சைலனே கைலைநாயகனே. (௩௯)

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க் குளத்திட மெ
லாமளித் தடியார், கண்மணிக் கமைய விருந்துசெய் தருணீ கண
மிருப்பதற்கிடம் புரியேன், வெண்மணிக் கழைமுன் கரியநெற்றித
ழிவேங்கைபொன் சொரியமா சுணங்க,டண்மணிப் பைக ளவிழ்த்
திடுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪0)

அருங்கலம் புனைய மகளிரோ ரிருவ ரணிமணம் புணர்த்தி
வாரணமுந், துரங்கமும் புலவர்க் குதவுநின் றனையே துதித்திடா
துழன்றனன் வறிதே, மருங்குநின் றழகா லத்திதாங் குவபோன்
மலைமலர்ப் பெருஞ்சுனை யொடுபூந், தரங்கநின் றிலங்க விளங்கு
றுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௪௧)

எனுறு மமரர் கடைகட லளித்த விருளொடு மணிமிடற் றடி
யே, ஞணவ விருளுங் கலந்திடிற் கருமை யழகுமிக் கிலங்குறுங்
கண்டாய், மாணெழில்வராக முழும்புழை யநந்தன் மணியொளிப்
பிழம்பெழல் சிறுதீத், தாணுவின் முருக னெழுதனேர் சோண
சைலனே கைலைநாயகனே. (௪௨)

மின்னவிர் சடிலக் கற்றையு மருள்கூர் விழிகளுந் திருமுகத்
தழகுங், கன்னவி றிரடோ ஞன்குமீ ரடியுங் கண்டுகண் களிக்கு
நாளுளதோ, வின்னிசை யொலிகேட் டுருகுதல் கடுப்ப விழிதரவரு

விகிம் புருடர், தன்னிகை ரிசைகூர் சாரலஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சஙு)

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு மடியவர்ப் பெறினெ மூர் திளங்கன், றுள்ளிநின் றுருகு மன்னையின் மநநெக் குருகுபுசெ ன்றிறைஞ் சிலனே, யெள்ளிவெம் புலியெண் கரிதிரு மேநி யேறு தறகாதென வெகுண்டு, தள்ளிவந் தருவி யிழிதனேர் சோண சைலனே கைலைநா யகனே. (சச)

இழையெனத் தளர்சிற் றிடையுறு முலையா ளெனக்குவண் புகலிவேந் தயின்ற, கழுமணிப் பசும்பொற் குலவுபார்கிண்ணங் கழுவுநீர் வார்ப்பதற் குரையாய், முழையிடைக் கதிர்மா மணிவி ளக்கேற்றி முசுக்கலை பிணையொடு மசோகத், தழையிடைத் தழுவி யுறங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சரு)

வினைவழி யுடலிற் கமைந்துறு முணவே வேண்டினர் வினை கொடு புணரா, நனைமலர் புனைநின் றிருவடி யடைவா ருடொறும் வேண்டில ருலகர், கனையிருள் கரந்த விடமறிந் துணப்போங் காட் சியிற் புனக்கிளித் தொகுதி, தனையெறி மணிகண் முழைபுகுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சகூ)

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறுப்பவு முடிமிசை யிருத்தும், பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப் புகலினுமென் கொனீ யிரங்கா, யோங்குறு மண்ட கோளகை யளவு முயர்ந்து மோர் மழவிடை முதுகிற், றூங்குபு நடக்க விருந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சஎ)

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு மிந்தியப் பலகைவெல், வீரமு மருளி யெனது வெம்பிறவி விலக்கியாட்கொள் ளுநா ளுளதோ, வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக ளரித்தெறிந்

தெறழ்வலிக் குறவர், சாரலி னிறுங்கு விதைக் குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சஅ)

தொகைமிகு மமரர் முனிவரர் பரவித் தொழுதகை யொடுவி ரை கமழ்பூம், புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப் புழுகுநீ யணிதல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதிமா மரஞ்சேர் குளிர்மதி விழுங்கவாய் வைத்த, தகைமிகு மூரற் றிரளைநேர் சோ ண சைலனே கைலைநா யகனே. (சகூ)

சினம்படு முளங்கொன் றவரவை யெனையுஞ் சேர்ப்பது தகு முனக் கிசைவண், டினம்படு மலரி னகவித ழொடுபுல் லிதழு மொன்றுதலுல குடைத்தே, மனம்படு மடிமை யுளன்சிலை யெ றிக்கு மனங்குழைந் துமையவள் களபத், தனம்பட வடிவுங் குழைந் திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ரு0)

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன் மணிப்பணி பெரும் புவி யாட்சி, யாம்பரி சவவென் றுன்பதமருவி னன்றியென் கவிக ளென் கவிகள், காம்பரி முரண்மும் மதகரி வளைத்த கைவிட மோதலாற் கதிர்த்தேர்த், தாம்பரி துணுக்கென் றீர்த்திடுஞ் சோ ண சைலனே கைலைநா யகனே. (ருக)

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய் தொலைப் பினுந் தொலைத்திடா துறினு,நின்னடி மலரை யன்றியான் மறந்துநினைப் பனோ விறக்கும் வானவரை, மன்னளி பருக வுடையிருன் மதவும் வாரண மதமும்வெள் ளருவி, தன்னொடு மிகலி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ருஉ)

நீரினு லழலான் வருங்கொடும் பிணியா னிருதரா லலகையால் விலங்காற், சோரரால் வருந்து மவரெலா நினது தூயநா மம்புகன் றிடுவார், சீருலா மணியா லரிபர வுதலாற் றிசையுற நீள்கையா

லெழின்மை, சார்தலா லுமையாள் விழிநிகர் சோண சைலனே கைலைநா யகனே. (௩௩)

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர முலைமுகட் டணிபெற மலராள், பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொற் பாவை யர்க்கிரங்கிடா தருளா, யகவிளக்கென்ன வகநிரிநெய்தீ யாக்கு வோ ரின்றியே யெழுந்த, சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (௩௪)

நீலியோ டுனைநா டொறுமருச் சித்து நின்றெழில் புரிந்திட வுடற்குக், கூலியோ தநமென் றளிப்பவர்க் கன்றிக் கூற்றினைக்கட க்குமா றெளிதோ, மாலியோ சனையின் வணங்குறுங் கைலை மலை நிவே தித்திடக் குவித்த, சாலியோ தநமென் றிடத்திகழ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௫)

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து துயர்ப்பிணி யெனு மலை யலைப்பக், கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது குழைக ழற் கழைபுக விடுப்பா, யேற்றிடும் விளக்கின் வேறுபட்டகத்தி னிரு ளெலாந் தன்பெய ரொருகாற், சாற்றினு மொழிக்கும் விளக் கெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௬)

கந்தர மிருந்து மடகுநீ ரயின்றுங் கரநிலத் தமைத்திரு பதமு, மந்தர நிமிர்த்து நின்னிலை யறியா ரரும்பவ மொழியுமோ வுரையா, யிந்திரன் வனத்து மல்லிகை மலரி னிண்டைசாத் தியதென நிறை ந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௭)

கூம்புறு கரமு மலர்ந்திடு முகமுங் கொண்டுநின் றனைவலம் புரிவோர், மேம்படு சரண மலர்ப்பொடி மேனி மேற்படிற் பவம் பொடிபடுமே, பூம்பொழிற் புகலிக் கிறைவனு னிலஞ்சேர்புண்ணி

யத்தலங்களி னடைந்து, தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண சைலனே கைலைநா யகனே. (ருஅ)

கானமே மருவும் விலங்கினுங் கடையேன் கற்பவை சற்றி லேன்விடய, ஞானமே யுடையே னறிஞராக் காணி ஞனிலே னுய்யுநா ளுளதோ, வானமே யளவு நெடுங்கிரி மலய வாதமோ துறுபவர் கட்குத், தானமே யுதவ வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ருகூ)

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியினைக் கவளமுண் கென்னுங், கழைசுளி நெடுநல் யானையின் முனிந்து கடக்குமென் பவமொழிந் திடுமோ, மழைமுகில் வந்து தவழ்ந்து விண்படரு மலிதரு புகையென வெழுந்து, தழலுரு வுண்மை விளக் குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சூ0)

வாத்திய முழங்கச் சிவிகையுங் கரியு மாறியூர்ந் தலவிவாழ்ந் தவரு,மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற் றேவலே வாழ் வென வறிந்தேன், பாத்திய மணிகள் கொண்டிழைத் திலங்கும் பாரவா சிகைமணி மேகஞ், சாத்திய தெனவில் வளைந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சூக)

குலத்தினிற் பிறந்து மலகினூல் கற்றுங் குணத்தினிற் சிறந்து நல் விரத, பலத்தினிற் கவர்ந்து நின்னடி யவர்க்குப் பரிவிலார்க்கதி யிலா தவரோ, கலத்தினிற் பொலிந்த விமயமீன் றெடுத்த கன்னி நுண்ணிடைமிசைக் களபா, சலத்தினிற் குறுதி கொடுத்திடுஞ் சோண சைவனே கைலைநா யகனே. (சூஉ)

மூடக விருளோ டென்னையின் றுண்ணு மூலையா சாலகற் றுவ லென், சூடருமொழியா லடைந்தனன் றமியேன் சூள்வமு வாதுநீ யருளாய், வீடுறுங் கவரி கீழ்விழ வுறல்கார் மிசையனம் பன்றிதா

மாறித், தாடலைதருவ வடைதனேர் சோண சைலனே கைலைநா யகனே. (சுங)

ஐயநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த வாதரவுன் பதாம்புயத்து, மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்டிரு நீற்றிலும் வருமோ, கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக் குழுக் கடோரணமென வெழுந்து, தையலர் கடியப் பறந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுச)

கனலினூ டமைத்த விழுதென வுருகக் கற்றதன் றுள்ளமென் கரங்கள், புனலுமாய் மலருங் கொடுநினைப் பூசை புரிந்தில வென்செய்கோ வுனையாய், சினவுநோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ் சிலம்புக ணுணவுட் கொள்வோர், சநநநோய் மருந்தா யெழுந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுரு)

ஊழுறு மணிப்பொற் கோயில்போய் வாவ லுறக்கொடுத் தாங்குநிற் புணர்த்தாப்,பாழுறு மநம்பே ரவாக்குடி யிருப்பப் பண்ணுமென் கண்ணுநண் ணுவையோ,வீழுறு மெயினர் கிழங்ககழ் குழியும் வேழம்வீழ் குழிகளு நிரம்பத், தாழுறு மருவி பொன்சொரி சோண சைலனே கைலைநா யகனே. (சுசு)

பைம்மறைப் படுத்தி யுள்ளறியாமற் பணிநறுந் துகில்புனைமடவார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும் வினையினேனுய்யுநா ளுளதோ, செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான் றிருமுடி கடப்பினு மூவர், தம்மியற் செப்பி னடங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுஎ)

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லலு நாடியின் பிணிப்பு, நெக்குறவறிவு கலங்குசாக் காடு நினைதொறு முளம் பதைக்கின்றேன்,மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னு முழக்

கழு மரகர வென்னுந், தக்கவர் முழக்கு மெதிரெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுஅ)

மரணமும் பிறவித் துயருநீங் குறநூல் வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த, கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின் கருத்தினை யின்னதென் றறியேன், முரணிபும் பருஉக்கை தலைமிசை யெடுப்ப முழைக்கரும் பாம்பென மண்ணித்தேர்த், தரணியுள் வெருவி யகன் றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுகூ)

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா லருவினைக் காடற வெறிந்து, மங்கலில் பத்தி வித்திட வடியேன் மநத்தினைத் திருத்து நா ளுளதோ, பொங்குறு செக்கர் கருவிசும் புறவேள் புரத்தெரி க்துவிட நோக்கித், தங்குத லொப்ப நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எ0)

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந் துன்னுநல் வினமு நீத் தகன்றே, யிருக்கும் வெங்கயவ ரினமுமென் றருளி யென்னை நின் னடிமைசெய் தருள்வாய், முருக்குமங் கதமா மணியுமிழ்ந் தகன்ற முழைதழற் றெனவுளம் வெருவித், தருக்குமொண் புலி சென் றுறமருட் சோண சைலனே கைலைநா யகனே. (எக)

அந்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மனோன்மணி மதங்கி, சுந்தரி யுமையுண் ணமுலை யெனநின் றுணைவியை வாழ்த்துமா றருளாய், வந்தரி சுருதி மருங்கினிற் பாட வயங்குதும் புருவுநா ரதனுந், தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எஉ)

நீக்குறு மயலு கிலைத்தபே ரறிவு நின்றிரு வடிமலர்க் கன்பு, காக்குறு மநமு முடையமெய்த் தொண்டர், கணத்தினு ளெனை யிடுத் தருளாய், தேக்குறு மிருவிற் கன்னல்காட் டுவேபோற் றென்

றல்வந் தசைதொறு மெல்லத், தாக்குறு காந்த டுெப்பலர் சோண
சைலனே கைலைநா யகனே. (எந)

பவமிலே மினியா மென்றிறு மாந்து பயமற விருந்திடப் பத்தி, நவமிலே மடியே மென்செய்வா னிருந்து நாளினை வறிதொழிக் கின்றே, மவமிலே மிமையா விழியினுற் காண்கை யால்வலங் கொளவடி நிலந்தோய், தவமிலே மெனவான் சுரர்தொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எச)

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே கைகணிற் றொழுபவே செவிகள், பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே பதநினை வலம் புரி வனவே, யெண்குபுற் றிடப்ப வெழுமணி கரவா விருந்துசென் றிருள்கவர் வனபோற், றண்கதிர்க் கற்றை கான்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எரு)

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று நேரிழை யவர்விழைந் திடுவோர், குணந்திரி தளிரின் மடியவுங் கண்டு கொடியனேன் வாழ்வுவந் திருந்தேன், மணந்திமிர் மகளிர் சிலம்பொடு மைந்தர் வார்கழ றுவக்கிட வலம்போய்த், தணந்திடு மமயத் தறிந்துநரண் சோண சைலனே கைலைநா யகனே. (எசு)

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள் வடுவெகிர் பொருவும் வா ணெடுங்கண், காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக் கன் னியர்ப் புகழ்வினை யறுமோ, பூந்திரை சுருட்டுங் கடல்கடை குந ரொண் பொறியர வின்றிமா தவர்க்குச், சாந்துய ரகற்று மருந் தருட் சோண சைலனே கைலைநா யகனே. (எஎ)

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு செவிகளுஞ் செவிடுபட் டைம்மே, லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவ முளங்கொ ளும் பரிசெனக் கருளாய், மந்தர சைலந் தருவிடங் களத்து வைத்

திடத் தினிமிலிம சைலந், தந்திடு மமுதை வைத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எஅ)

நயங்கொளு மலரா னின்றிரு வடியை நாடொறு முயிருணுங் கூற்றம், பயங்கொள வகலா தருச்சனை புரிந்து பரகதி யடையுநா ளுளதோ, வயங்கொளும் விடயப் பெரும்பகை கடந்து வானநா டாண்டிட மதிப்போர், சயங்கொள விடைதற் கரணமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எகூ)

பிரம்பொரு கரங்கொண் டடிப்பநந் தீசர் பெருங்கல்வீழ் பா சியி னிமையோர், சிரம்பொர லொதுங்கி நெருங்குநின் னவையிற் றீயனே னணையுநா ளுளதோ, வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே லமர்த்தகட் கிரிமக ளிணைக்குஞ், சரம்பொர விருந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அ0)

காமனை முனிந்த முனிவரர் புகுமெய்க் கதியிடைப் புகவிடுத் திடினும், பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின் பதமல ரன்றி வே றுளதோ, வாமனை பொருந்து மூலகுள குவட்டு மலைகள்போ லாதுணு முலையா, டாமனை பொருந்து மானுள்வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (அக)

தொடுக்குமா கமங்க ளேலாஞ்சொலைந் தெழுத்துந் துணிந்த நெஞ் சிருக்கையாற் பகையைப், படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமா மறலியை வெருவேன், மடக்குவார் கலாப மயிறுயி லெழுந்து மருவலர் வேங்கைமீ தகவத், தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அஉ)

நிந்தியா தடல்முழுதுநீ றணிய நேசியா தமலவைந் தெழுத் துஞ், சிந்தியா தழலு மெனைக்கொடுங் கூற்றென் செய்யுமோ வறிந்திலேன் றமியேன், வந்தியா வரவ மன்றிடைக் கண்ட மலர்

சிலம் படியையமண் ணுணிபோய்ச், சந்தியா தயர வொளித்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௩)

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு மதர்விழிக் கடலினு மளகக், கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக் கதியிடை நடத்துமா றெளிதோ, செங்கதிர் காலை மாலையுந் தங்கச் சிலம்புள வெணக்கடும் பகலிற், றங்குற ன்டி நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௪)

கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்து வெண் ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான் பூசனை புரியுமா றருளாய், முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு முடிமிசை முத்துமேற் கட்டித், தண்டிரைக் கங்கை யாறுசேர் சோண சைலனே கைலைநா யகனே. (௮௫)

நாவினேந் தெழுத்து மந்திர மலாத நவிற்றுவோர் தமையுநீ யிருப்பப், பாவினங் கொடுபுன் மனிதனைப் புகழும் பாமரர் தமையுமென் றொழிவேன், கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த குன்றமம் பாடகக் குன்றந், தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௬)

திங்களுங் கதிரு மிலங்கிய மானுந் திகழ்பெரும் பூதமோ ரைந்தும், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டுகண் களிக்குநா ளுளதோ, பொங்குகுங் கிலியக் கலயவா ரழலிற் புகையெனச் சரோருக வல்லி, தங்குவண் டெழுபூம் பொய்கைசூழ் சோண சைலனே கைலைநா யகனே. (௮௭)

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள் பூதங்க ளெனவிலா தடங்க, வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி யருவினைக் குறும்பற வெறியாய், செறிமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ்

சேரமா துமைதினங் கட்டுர், தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அஅ)

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து புண்ணியர்க் கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பி னடைந்தசெம் மணிபோ லெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கடலு ளடங்கும் வெற் பன்றி மலைதரு மருட்பெருங் கடலைத், தன்னிடத் தடக்கு மலை யெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அகூ)

நீங்கியநேயத் தவர்க்கறி வரிய நெடியவ னெஞ்சகன் றிடாத, தேங்கிய சோதி மன்றுளா வெவென் சிந்தையு ணடப்பநின் பதங்க, ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந் துழுமளி புரியிருள் மருவித், தாங்கிய வால வட்டநேர் சோண சைலனே கைலைநா யகனே. (கூ0)

எழுபசும் புல்லும் புனலுமெவ் விடத்து மிருந்திட நினைத்த வவ் விடத்தே, விழைவொடு வந்து தோன்றுநீ யிருப்ப வீணின்மா னிடர்பிறந் துழல்வார், மொழிதரு கருணை மலையெனும் பெயரன் மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத், தழுவற நின்று வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கூக)

வேணவா வகன்று நின்றிரு வடியின் மெய்ம்மையன் படைந் துபொய்ப் பிறவி, நாணுவா ரிணங்கண் டுறும்படி தூய ஞானநாட் டம்பெற வருளாய், சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச் சிலம்பு கள் சிறுதரும் பாகத், தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கூஉ)

நின்னையே நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்கு நெஞ்சகமு, நின்னையே துதிக்கு நாவுமென் றருளி நின்றிரு வடி யின்வைத் தருள்வாய், தன்னையே றினர்க்குச் சகமெலாங் காட்டுங்

தரணியோ டிகலிமே வினர்க்குத்,தன்னையே காட்டு மலையெனுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (௯௩)

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும் விளங்கொளி மார்பும்
வானுலக, மன்வணங் குறுநின் பதாம்புய மலரு மநங்குடி யிருக்கு
நா ளுளதோ,பொன்வணம் புரியுங் காகமொன் றினைப்பொற் பொ
ருப்பென வடைபொரு ளனைத்துந், தன்வணம் புரியும் பொருப்
பெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௪)

குருமணி மகுடம் புனைந்துல காளுங் கொற்றவ ராதலி னென்
கட்,கருமணி யெனுநின் றொண்டர்குற் றேவல் கருதியாட் பட்டிட
லினிதே, பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த பிள்ளையங் கதி
ரென வரவந், தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோண சைல
னே கைலைநா யகனே. (௯௫)

சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த திறலுமுப் புரஞ்சுடு
விறலு, மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட வடலுமேத் தினர்க்
கிட ருளதோ, வும்பர்மா மதியி லங்கையி லிருந்த வுழைகுதித்
திருப்பவா ரழல்வான், றம்பமா யெழுந்து நின்றிடுஞ் சோண சை
லனே கைலைநா யகனே. (௯௬)

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனைநின் னடியரிற் கூட்
டுக வுலகி, னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றுனது நற்கள
மிகழ்பவ ருளரோ, வஞ்சமைங் கரன்கொண் டிளவலோ டிகலி
வலங்கொள்வா தின்னும்வந் துறினுந், தஞ்சமென் றிடாது நின்
றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௯௭)

அணிந்திடு கலனுஞ் சாந்துமொண் டுகிலு மரிவையர் போக
மும் பெறுவான்,றுணிந்திடு மனமென் றுனைப்பொரு ளாகத் துணி
யுமோ வறிந்திலேன் றமியேன், பணிந்திடு மயன்மால் பெருமைக

ஆனைந்தும் பறவைகொண் டெழுதலாய் முடிந்து, தணிந்திட
கிமிர்ந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கூகூ)

பூவுறு தடமு மதியுறு விசும்பும் பூணுறு முறுப்புரின் றுல
காள், கோவுறு நபரு மென்னவென் மநநின் குறைகழன் மருவுநா
ளுளதோ, வேவுறு மனைசெய் பவர்கொள மரந்தாங் கோங்கல்க
ணுணமுன் னினர்க்குத், தாவுறு முயர்வீ டளித்தருள் சோண
சைலனே கைலைநா யகனே. (கூகூ)

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த செல்வமு மில்லில்வாழ்
பவர்க்குப், பேரணி கலமென் புதல்வருங் கதியும் பெறத் துதித்
துப் பவர்க்கருள் பவனீ, நேரணி கதியை மறந்தவர் கண்டு நினைந்
து மிக்கபே ரருளாற், றூரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. (௧00)

சோணசைலமாலை

முற்றிற்று.

ஏணருஞ் சோண சயிலனுக்கெஞ் ஞான்றும்
பூணர மாலை புனைந்தணிந்தான்—மாணப்
பவப்புணரி நீக்கியிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சையன்றான் றேர்ந்து.

புத்தக விளம்பரம்.

சிவஞான தீபம்	0	2	0
தேவிகாலோத்தரம் உரை	0	2	6
கருணீகர் புராணம்	0	2	0
பருவதராஜ புராணம்	0	2	0
சப்தஸ்தல தேவாரம்	0	8	0
அற்புத தேவாரத்திரட்டு	0	3	0
நித்தியகர்ம அநுட்டானவிதி (சைவம்)	0	2	0
திருவிளையாடற்புராணதோத்திரக்கவி	0	2	6
திருப்புகழ் 150 பாடல்	0	4	0
நித்திராநுஷ்டான விதி திருவாராதனக்கிரமம்	0	4	0
திருவரங்கத்தந்தாதி உரை	0	2	0
காமாக்ஷியம்மன் தபசுமாலை	0	4	0
அறப்பளீசுரசதகம்	0	2	0
சுபத்திரைகிர்த்தனை	0	2	0
விநாயகர் பஜனை கீர்த்தனை	0	2	0
சின்னசாமி சாஸ்திரியார் கீர்த்தனை (பெரிசு)	1	0	0
த்ருவசரித்திரக் கீர்த்தனை	0	4	0
ஜாதகாலங்காரம் மூலம்	0	8	0
சோதிட பாலசிக்ஷை	0	6	0
சகாதேவர்சாஸ்திரம்-108	0	4	0
மனையாரூடசிந்தாமணி சிந்தராரூடம்	0	2	0
பஞ்சதந்திரக்கதை	0	4	0
ஷை பாட்டு	0	4	0
கதாமஞ்சரி	0	4	0
அகஸ்தியர் தீக்ஷாவிதி 200-பாடல்	0	2	0

கொ. லோகநாத முதலியார்,

மனோன்மணிவிலாச சென்ட்ரல் புக்டிபோ,

29 செ. வைத்தியநாத முதலியார் வீதி, சென்னை.